IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 35/2016

Deposition of Witness : PW 1

Name : மூர்த்தி (வயது – 70)

Father's Name /W/o : த/பெ சுப்பிரமணி

Calling : –

Address : அரக்கோணம்.

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.04.2026.

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. இந்த வழக்கில் 2 ஆம் வாதி லட்சுமியை ஏன் தரப்பினராக சேர்த்தேன் என்றால் அவர் என் மனைவி என்பதாலும் அவரும் சேர்ந்து என்னுடன்சொத்து வாங்கியதால் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன். எங்களுக்கு பிள்ளைகள் உள்ளார்களா என்றால் ஆம். எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் இரு மகன்கள் 1 மகள். என் மனைவி இறந்த பிறகு பிள்ளைகளை வாரிசுகளாக சேர்க்கவில்லை என்றால் நான் இந்த வழக்கில் இருந்ததால் அவர்களை சேர்க்கவில்லை. நான் மற்றும் என் மனைவி யாரிடமிருந்து கிரையம் வாங்கினோம் என்றால் போலாட்சியம்மாள் மற்றும் அவர் மகள்கள் குனாம்மாள், வாசுகி, அனுசுயா ஆகியோரிடமிருந்து வாங்கினோம்.

2. எந்த வருடத்தில் கிரையம் வாங்கினோம் என்றால் 1997 வருடத்தில் கிரையம் வாங்கினோம். மேற்படி கிரைய பத்திரம் அசல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி போலாட்சியம்மாள் மற்றும் அவர் மகள்கள் குனாம்மாள், வாசுகி, அனுசுயா ஆகியோருக்கு எவ்வாறு சொத்தில் உரிமை வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் அவர்களின் பெற்றோர் வாங்கிய சொத்து மூலம் அவர்களுக்கு

உரிமை வந்தது.

3. அசல் வழக்கு எண்.373/1991 இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இன்றைய தேதிவரை அமலில் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் தீர்ப்புபடி செலவுத் தொகை பிரதிவாதிக்கு செலுத்தினேன் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி மேற்படி வழக்கில் வழக்கறிஞர் ஆணையர் நியமித்து வழக்கு சொத்தை அவர்கள் அளந்து அறிக்கை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**(பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**